# இராணுவம் பெரும் அதிர்ச்சி; தாக்குதல் இல்லை


விலை ரூபா 4-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 33 மாசி 22 ஷஃபான் 18 இதழ்: 25

யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 7-3-1991


(கொழும்பு)

அமைச்சர் ரஞ்சன் விஜயரத்னவின் படுகொலை, இராணுவ வட்டாரங்களில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. தற்போதைக்கு உடனடியாகத் தரைத் தாக்குதல் எதுவும் நடைபெறமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக வட பகுதியிலுள்ள சிறிலங்கா இராணுவத் தளபதி ஒருவர் கூறி (4-ம் பக்கம் பார்க்க)

## தவறான தீர்வுக்கெல்லாம் ரஞ்சன் பொறுப்பேற்பார்

(கொழும்பு)

"இலங்கை இராணுவம் சில தவறான தீர்வுகளை எடுக்கும்போதெல்லாம் திரு. ரஞ்சன் விஜேரத்ன அவைகளுக்கு தானே பொறுப்பேற்றுக் கொள்வார்.

"அவரின் மறைவு படையினருக்குப் பல வழிகளாலும் (4-ம் பக்கம் பார்க்க)

## சதாமின் மகன் உயிரோடு இருக்கிறார்?

(பக்தாத்)

ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசைனின் மகன் அங்கு ஏற்பட்ட கலவரங்களில் கொலை செய்யப்பட்டதாக முன்னர் வந்த செய்தியை மறுத்து இப்போது அவர் உயிரோடு இருப்பதாக பக்தாத் வானொலி தெரிவித்துள்ளது. (4-ம் பக்கம் பார்க்க)

### மீண்டும் இந்தியாவில் அரசியல் நெருக்கடி

# இந்தியப் பிரதமர் சந்திரசேகர் பதவியிலிருந்து ராஜினாமா!

## அமைச்சரவை ராஜினாமா; தேர்தலுக்கு பரிந்துரை

(புதுடில்லி)

**இந்தியப் பிரதமர் திரு. சந்திரசேகர் நேற்று தமது பதவியை ராஜினாமா செய்துள்ளார். இதையடுத்து கடந்த 4 மாதகால அமைச்சரவையும் ராஜினாமா செய்துள்ளது. புதிதாக தேர்தலை நடத்துமாறு திரு. சந்திரசேகர் ஜனாதிபதிக்கு பரிந்துரைத்துள்ளார்.**

திரு. ராஜீவ் காந்தியின் வீட்டை வேவு பார்த்த சர்ச்சையடுத்து காங்கிரஸ் எம். பி. க்கள் நேற்றுபாராளுமன்றத்தைப்பகிஷ்கரித்தனர். தொடர்ந்தும் பகிஷ்கரிக்கப் போவதாகவும் அறிவித்தனர்.

இதையடுத்து பாராளுமன்றத்தில் உரையாற்றிய பிரதமர் திரு. சந்திரசேகர், காங்கிரஸ் உறுப்பினர்கள் பாராளுமன்றத்தைப் பகிஷ்கரித்ததன் மூலம் தமது ஆதரவை விலக்கிக் கொண்டதாகக் கருதியே தாம் பதவியைத் துறப்பதாகவும் தொடர்ந்தும் அவர்கள் (4-ம் பக்கம் பார்க்க)

## காங்கிரஸ் செயலுக்கு எதிர்க்கட்சிகள் கண்டனம்

(புதுடில்லி)

காங்கிரஸ் தலைவர் திரு. ராஜீவ் காந்தி திரு. சந்திரசேகருக்கு நம்பிக்கைத்துரோகம் இழைத்துவிட்டதாகவும் இது அனைவரும் எதிர்பார்த்த ஒன்றே என்றும் அனைத்து எதிர்க்கட்சிகளும் தெரிவித் (4-ம் பக்கம் பார்க்க)

## புளொட் - பொலிஸார் தடைமுகாமில் மோதல்

(யாழ்ப்பாணம்)

வவுனியா தடைமுகாமில் நேற்று, சிறிலங்காப் படையினருடன் சேர்ந்து இயங்கும் 'புளொட்' இயக்கத்தினருக்கும், பொலிஸாருக்குமிடையே மோதல் ஒன்று ஏற்பட்டதாக (4-ம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் கைதான 20 தமிழரை காணவில்லை

(கொழும்பு)

கொழும்பில் கடந்த சில தினங்களில் கைது செய்யப்பட்ட தமிழ் இளைஞர்களில் 20 பேரைக் காணவில்லை என புகார் செய்யப்பட்டுள்ளது. (4-ம் பக்கம் பார்க்க)

## ஒரு தாயின் பரிதாப மரணம்

(மாங்குளம்)

சைக்கிளில் சென்ற பெண்ணின் சேலை சில்லுக்குள் சிக்குண்டதால் வீதியில் தலையின் பின்புறம் அடிபட விழுந்த பெண் பரிதாபமாக மரணமானார். (4-ம் பக்கம் பார்க்க)

## தென் தமிழீழ சிறுவர்கள் தென்பகுதியில் விற்பனை

(மாங்குளம்)

பொத்துவில் பகுதியில் நடைபெற்ற இராணுவ நடவடிக்கையால் தாய், தந்தையரை இழந்த பல தமிழ்ச் சிறுவர்கள் தெற்கே பல மாவட்டங்களில் பெரும்பான்மைச் சமூகத்தினருக்கு விற்பனை செய்யப்படுகின்றனர்.

இந்த அனாதைச் சிறுவர்கள் விற்பனை செய்யப்பட்ட இடங்களில் ஆயாவாகவும், தொழிலாளியாகவும் வேலைசெய்ய வேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை மட்டக்களப்பில் தமிழ்க் கிராமங்கள் இன் (4-ம் பக்கம் பார்க்க)

## வளலாய் பகுதியில் விமானத் தாக்குதல்

(வடமராட்சி)

வடமராட்சில் வளலாய் கடற்கரையை அண்டிய பகுதிகளில் நேற்றுக் காலை முதல் மாலைவரை கடும் விமானத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது. (4-ம் பக்கம் பார்க்க)

## 'ஜெனரல்' ரஞ்சனின் பூதவுடல் தகனம்

(கொழும்பு)

கார் குண்டு வெடிப்பில் கொல்லப்பட்ட அமைச்சர் 'ஜெனரல்' ரஞ்சன் விஜயரத்னவின் இறுதிக்கிரியை நேற்று மாலை பூரண அரச, இராணுவ மரியாதையுடன் தகனம் செய்யப்பட்டது.

நேற்றுக்காலை பாராளுமன்றத்தில் அஞ்சலிக்காக பூதவுடல் பேழை வைக்கப்பட்டபின் அங்கிருந்து அவரது இல்லத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு வைத்து பேழை உத்தியோகபூர்வமாக இராணுவத்திடம் கையளிக்கப்பட்டது.

பூதவுடல் பேழை பீரங்கி வண்டியில் வைக்கப்பட்டு முப்படைகளின் அணிவகுப்புடன் 'சுதந்திர சதுக்கத்துக்கு' (4-ம் பக்கம் பார்க்க)

## ரஞ்சனின் இடத்திற்கு பிரதமர் விஜயதுங்க

(கொழும்பு)

இலங்கைப் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சராக, பிரதமரும், நிதியமைச்சருமான திரு. டி. பி. விஜயதுங்க பொறுப்பேற்றுள்ளார்.

அமைச்சர் ரஞ்சன் கொலை செய்யப்பட்டதை அடுத்து திரு. விஜயதுங்க இப்பதவி (4-ம் பக்கம் பார்க்க)

## எண்ணெய் வள ஆராய்ச்சி இந்திய உதவி நிராகரிப்பு

(கொழும்பு)

இலங்கையில் எண்ணெய் வள ஆராய்ச்சியில் ஈடுபடக் கனேடிய நிறுவனம் ஒன்றுக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இதற்கு முன் இந்த உதவியை இந்தியாவிடம் இருந்து பெற முடிவுசெய்யப்பட்டிருந்த போதிலும் தற்போது இது கனேடிய நிறுவனமான 'ரி. ஆர். எவ்.' ஆராய்ச்சி நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாம்.

இதற்கான உடன்பாட்டை இந்நிறுவனம் இலங்கைப் பெற்றோலியம் கூட்டுத்தாபனத்துடன் ஏற்படுத்தவுள்ள (4-ம் பக்கம் பார்க்க)

## காரில் இருந்தவர்கள் யார்?

(கொழும்பு)

அமைச்சர் ரஞ்சன் விஜயரத்ன, கார்க் குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டபோது அவரது காரில் வெளிநாட்டவர்களும் இருந்திருக்கலாம் என்ற வதந்தி கொழும்பில் (4-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### ஸ்நானப் பவுடர்

மில்க்வைற் ஸ்நானப் பவுடர் எண்ணெய் முழுக்குக்கென இயற்கைச் சாதனங்கள் கொண்டு தயாரிக்கப்பட்டது. பக்கெற் ஒன்று ரூ 1/50 மட்டுமே. இணுவில், திருநெல்வேலி யாழ். நகர் அண்ணா கோப்பிக் கடைகளிலும் விற்பனையாகிறது. (எ-1127)

### விற்பனைக்கு

பருத்தித்துறை வீதியிலுள்ள கட்டைப்பிராய் பகுதியில் 10 பரப்புக் காணியும், நல்லூர் செல்லர் வீதியில் வீடுகட்டக் கூடிய 4½ பரப்புக் காணியும் லேத் மெஷின்கள், தகடு வெட்டும் கட்டர் முதலியனவும் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க பரஸ்கோ ஸ்தாபனம், முத்திரைச்சந்தை. நல்லூர். (இ-4423)

## மெய்வல்லுநர் போட்டி

(அச்சுவேலி)

அச்சுவேலி புனித திரேசாள் மகளிர் கல்லூரி வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் நாளை 8ம் திகதி வெள்ளிக்கிழமை வீரவேங்கை நிதி விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

## அறவழி நிலையம் உதவி

(யாழ்ப்பாணம்)

அறவழி கல்விப் புலமைப் பிரிவின் திட்ட மாணவர்களுக்காகிய அப்பியாசக் கொப்பிகள் இம்மாதம் 16-ம் திகதி சனி காலை 9 மணிக்கு அறவழி பணிமனையில் வழங்கப்படும்.

## மாணவருக்கு பாடசாலை உபகரணங்கள்

(உடுவில்)

குரும்பசிட்டி சன்மார்க்க சபையினரால் கன்னாகம் பயிலணி மகாவித்தியாலயத்தில் தற்காலிகமாக இயங்கிவரும் குரும்பசிட்டி பொன். பரமானந்த மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு உபகரணங்கள் வழங்கப்பட்டன.

குரும்பசிட்டி பொன். பரமானந்த மகாவித்தியாலய அதிபர் வி. தளையசிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் உடுவில் கொத்தணி அதிபர் திருமதி தி மங்கையர்க்கரசி பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டார். தெல்லிப்பளைக் கொத்தணி அதிபர் எஸ். கந்தசாமி சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். (109)

## ஊரெழுவில் முதலுதவிச் சேவை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். செஞ்சிலுவைச் சங்கம் ஊரெழுப் பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில் முதலுதவி நிலையத்தையும் அம்புலன்ஸ் சேவை நிலையத்தையும் நேற்று முன்தினம் முதல் ஆரம்பித்துள்ளது.

மேற்படி நிலையங்கள் இரவு தோறும் சேவை செய்யவிருக்கின்றன.

ஊரெழு கிராமத்திற்கு சமீபமாகவுள்ள கிராமங்களுக்கு இதன் சேவை உதவியாக இருக்குமென்று தெரிவிக்கப்படுகிறது.

யாழ். செஞ்சிலுவைச் சங்கம் தொடர்ந்து தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்திலும், யாழ். செஞ்சிலுவை தலைமையகத்திலும் முதலுதவி அம்புலஸ் சேவை நிலையங்களை நடாத்தி வருவது குறிப்பிடத்தக்கது. (153

## வேலைத் திட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

1991- ஆம் ஆண்டுக்கான உத்தேச வேலைத் திட்டங்கள் பற்றி பிரிவு உதவி அரசாங்க அதிபர்கள் சிபார்சு செய்த திட்டங்களைச் சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவர்களுக்கு யாழ். செயலகத் திட்டமிடல் பகுதி அனுப்பிவைத்துள்ளது [153]

## மீண்டும் பழைய இடத்தில்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயம் புலோலி புற்றளை மகாவித்தியாலயத்திலிருந்து மீண்டும் பருத்தித்துறையில் சொந்தக் கட்டிடங்களுக்கும் மாற்றப்பட்டுள்ளதாக வித்தியாலய அதிபர் வி. கே. ஏகாம்பரநாதன் தெரிவித்துள்ளார். [52]

## விவசாய உற்பத்திக் குழு நியமனம்

(மானிப்பாய்

ஆனைக்கோட்டை மூத்த நயினார் கோவிலடியில் விவசாய உற்பத்திக் குழு அலுவலகம் ஒன்று திறந்துவைக்கப்பட்டுள்ளது.

## முறைசாராக்கல்வி உபவள நிலையம்

(யாழ்ப்பாணம்)

முறைசாராக் கல்வி உபவள நிலையம்யாழ். கனகரத்தினம் மத்தியமகா வித்தியாலயத்தில் நாளை 8ந் திகதி காலை 9-00 மணிக்கு யாழ். கல்விப்பணிப்பாளர் திரு இரா. சுந்தரலிங்கத்தால் திறந்து வைக்கப்படும்.

கல்விவழி காட்டல், தொழில் வழிகாட்டல் நூலக சேவையைப் பெறவிரும்பும் முறைக்கல்வி, முறைசாராக் கல்வி மாணவரும், பொதுமக்களும் இந்நிலையத்தைப் பயன்படுத்தலாமென்று தெரிவிக்கப்படுகிறது.

## பொருட்கள் விலை சரிவு

(யாழப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் உப உணவுப் பொருட்களின் விலை கொழும்பு விலைகளிலும் பார்க்க வீழ்ச்சியடைந்துள்ளதுடன், பொருட்களும் தாராளமாகக் கிடைக்கின்றன. மற்றைய தட்டுப்பாடான பாவனைப் பொருட்களின் விலையும் வீழ்ச்சியடையத் தொடங்கியுள்ளது. (எஸ்)

## 6ம் ஆண்டு வகுப்புகள்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியிலும் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரக் கல்லூரியிலும் புதிய 6ம் ஆண்டு வகுப்புகள் கடந்த திங்கள் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இக்கல்லூரிகளின் 6-ம் ஆண்டு வகுப்புகளுக்கான மாணவ, மாணவிகள் யாழ். கல்வித்திணைக்களத்தால் நடாத்தப்பட்டு பொதுப்பரீட்சையின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டனர். (52)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

''அண்மையில் யாழ். பல்கலைக்கழக தமிழ் மன்றத்தினரால் நடாத்தப்பட்ட ''இன்றைய சூழ்நிலைகளால் சமுதாயத்தில் ஏற்பட்டுள்ள உளத்தாக்கங்களும் அவற்றுக்கான தீர்வும்'' என்ற தலைப்பிலான கருத்தரங்கு சம்பந்தமான கலந்துரையாடல் இன்று 7ம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் கைலாசபதிகலையரங்கில் நடைபெறும்.

இக்கலந்துரையாடலில் வைத்திய கலாநிதி டி. ஜே. சோமசுந்தரம், வணபிதா. செல்வரட்ணம் ஆகியோர் உரையாற்றுவார்கள்.

## அப்பியாசக் கொப்பிகள்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் தமது பிரதேசத்திலுள்ள பாடசாலைகளுக்கு நியாய விலையில் அப்பியாசக்கொப்பிகளை கடந்த வாரம் வழங்கியுள்ளது. 15 பாடசாலைகள் இந்த அப்பியாசக் கொப்பிகளை பெற்று மாணவர்களுக்கு வழங்கியுள்ளதாக சங்கத்தின் பொது முகாமையாளர் திரு எஸ். வைரவநாதன் தெரிவித்தார். (72)

0 0

(கிளிநொச்சி)

கரைச்சி வடக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினர் முரசுமோட்டை, குமரபுரம் ஆகிய கொத்தணிப்பிரிவுகளில் பாடசாலை மாணவர்களுக்குக் கொழும்பிலிருந்து அப்பியாசக் கொப்பிகளைத் தருவித்து வழங்கியுள்ளனர். [83]

## பதுங்கு குழிகள் சீரமைப்பு

[யாழ்ப்பாணம்]

சிலதினங்களாக யாழ். குடாநாட்டில் இடம்பெற்று வரும் விமானத்தாக்குதலிலிருந்து மக்கள் தங்களை பாதுகாக்கும்பொருட்டு தூர்ந்து போன நிலையிலிருந்த பதுங்கு குழிகளை மீண்டும் சீரமைத்து வருவதனையும், புதிதாக பதுங்குகுழியினையும் அமைத்து வருவதையும் நேற்று பலஇடங்களில் காணக்கூடியதாக இருந்தது. (56)

## மகளிர் தினம்

(சாவகச்சேரி)

சர்வதேச மகளிர் தினத்தை ஒட்டி நாளை வெள்ளிக்கிழமை அறவழிப் பணிமனையில் ''இன்றைய பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகளும் அவற்றிற்கான தீர்வுகளும்'' என்னும் தலைப்பில் கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

ஐம்பதுக்கும் அதிகமான பெண்கள் இக்கருத்தரங்கில் கலந்து கொள்ளவுள்ளனர்.

## ஓய்வு பெற்றார்

(பருத்தித்துறை)

வேலணை தபாலதிபராகக் கடமையாற்றிய திரு எஸ். சிவராஜசிங்கம் கரவெட்டி தபாலதிபராக இடமாற்றம் செய்யப்பட்டுப் பொறுப்பேற்றுள்ளார். கரவெட்டி தபாலதிபராகக் கடமையாற்றிய திரு. எஸ். மகாதேவா சேவையிலிருந்து இளைப்பாறியுள்ளார். (52)

கிரிக்கெட்

## வெற்றி தோல்வி இல்லை

(வெலிங்டன்)

நியூஸிலாந்து - இலங்கை அணிகளுக்கிடையே நியூஸிலாந்தில் நடைபெற்ற மூன்று கிரிக்கெட் டெஸ்ட் போட்டிகளும் வெற்றிதோல்வியின்றி முடிவடைந்தன.

3-வது டெஸ்ட் போட்டியில் இலங்கை முதல் இன்னிங்சில் 380 ஓட்டங்களையும் 2வது இன்னிங்சில் 319 ஓட்டங்களையும் பெற்றது. நியூஸிலாந்து 317, 261-5

இலங்கை வீரர் அரவிந்த டீ சில்வா முதல் இன்னிங்சில் 96ஓட்டங்களையும் 2-வது இன்னிங்சில் 123 ஓட்டங்களையும் எடுத்தார்.

மேற்படி கிரிக்கெட் தொடரில் சிறந்த வீரருக்கான பரிசை அரவிந்த டீ சில்வா பெற்றார். (வி)

## மயானம் சீரமைப்பு

[மானிப்பாய்]

ஆரியம்பிட்டி இந்துமயானம் சிரமதானம் மூலம் அண்மையில் துப்பரவு செய்யப்பட்டுள்ளது.

இச் சிரமதானப்பணிகளில் நவாலியேற்கு சனசமூக நிலையமும் நவாலி வடக்கு சனசமூக நிலையமும் இணைந்து செயல்பட்டன.

## தராசுகளுக்கு முத்திரையிடல்

(பருத்தித்துறை)

யாழ். உள்நாட்டு வர்த்தகத் திணைக்களத்தின் அளவைகள் பிரிவினர் பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள வர்த்தகர்களின் அளவைகள் நிறுவைகள், தராசுகளுக்கு முத்திரையிட்டு வருகின்றனர். யாழ். உள்நாட்டு வர்த்தகத் திணைக்கள அளவைகள் நிறுவைகள் பரிசோதகர் திரு. கே. ஜே. றூபேந்திரன் தலைமையில் இம்முத்திரையிடும் நடவடிக்கைகள் நடைபெற்றுவருகின்றன. (52)

## இராசி பலன்

07-03-1991

வியாழக்கிழமை

ஸப்தமி பி. இ. 4-18 வரை; அனுஷம் பி இ 3. 15 வரை சித்தயோகம் இராகுகாலம் பகல் 1. 55 முதல் 3.25 வரை

மேடம்: தொழில் பாதிப்பு, கடன் தொல்லை, மறைமுக எதிர்ப்பு.

இடபம்: வாழ்க்கை வசதி, தொழில் லாபம், பயணங்களால் அனுபவம்.

மிதுனம்; பண நெருக்கடி, பொதுத்துறை ஈடுபாடு, குடும்பமகிழ்ச்சி.

கடகம்: வருவாய் பாதிப்பு வைத்திய செலவு, இனசனப் பகை.

சிங்கம்: அதிகயோசனை, கடன் தொல்லை, காரியத்தடை வெறுப்பு

கன்னி: பெரியோர் ஆசி, வசதி அதிகரித்தல், இனசன பாராட்டு.

துலாம்: எதிர்பாரதவிபத்து உடல் சோர்வு, குடும்ப அமைதி குன்றல்.

விருச்சிகம்: மனவிரோதம், தொழில் போட்டி, குடும்ப பரிவு.

தனுசு: குடும்பத்தில் அமைதி தொழில் நஸ்டம். அலைச்சல் மிகுதி.

மகரம்: உற்சாகம், குடும்ப மகிழ்ச்சி, தொழில் மாற்றம், புகழ்.

கும்பம்; வேண்டாதஉறவு, தனதர்மம், தொழில் இலாபம், காரிய சித்தி.

மீனம்: அவமதிப்பு, பணத்தொல்லை, குடும்ப கஷ்டம், கருத்து மோதல்.

- ஜோஸ்யர்

## 31 ம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



திருமதி

### சின்னத்தம்பி பொன்னம்மா

அன்னையின் மடியில்: 21-03-1911 ஆண்டவன் திருவடியில்: 05-02-1991

குடும்பத்தில் ஒளி விளக்காய் நல்வழியின் பேரொளியாய் தருமத்தின் உறைவிடமாய் திகழ்ந்து. பூவுலகை விட்டு விண்ணுலகை அடைந்த ஆருயிர் அன்னையின் சாந்திக்காக 05-03-1991 செவ்வாய்க்கிழமை காலை பல்லதீவு தீர்த்தக்கரையில் அந்தியேட்டியும் 07-03-1991 வியாழக்கிழமை அன்று அன்னாரின் இல்லத்தில் சபிண்டீகரணமும் நடைபெறும். அவ்வமயம் யாவரும் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்க வேண்டுகின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

''வதனி வாசம்''
1ம் வட்டாரம்
புங்குடுதீவு.

தகவல்: சி. விசாகப்பெருமாள்
சின்னத்தம்பி அன்கோ
சாவகச்சேரி. (கி-4425)

## வருடம் முழுவதும் பலன்பெறக்கூடியது
# காளான் வளர்ப்பு!

விவசாயத்தைப் பன்முகப்படுத்துதல் என்பது வளர்முக நாடுகளில் இன்று முக்கியமான ஓர் அம்சம்.

இதன் முதற்படியே காளான் உற்பத்தியை விவசாயிகள் மத்தியில் அறிமுகம் செய்தலும், ஊக்குவித்தலுமாகும். குறைந்த தொழில் நுட்ப அறிவுடன், சிறிதளவு முதலீட்டுடன் சாதாரண விவசாயியால் கூடிய இலாபம் பெறக்கூடிய உற்பத்திகளில் முதன்மையானது காளான். வருடம் முழுவதும் தொடர்ச்சியாக விவசாயியால் பலன் பெறக்கூடியதும், குறைந்த இடவசதியுடன் கிராம, நகர மட்டங்களில் உற்பத்தி செய்யக்கூடியதும் இதன் சிறப்பு அம்சங்களாகும்.

இன்று பாவனையாளர் மத்தியில் அதிக தேவை உடையதும் சிறந்த ஊட்டச்சத்து நிறைந்ததும், வித்தியாசமான சுவையை ஏற்படுத்தக்கூடியதும் சைவ உணவுகளில் முதன்மையானதும் காளான்.

வடபகுதியில் காளான் உற்பத்தி செய்வதற்கு பெருந்தடையாக இருப்பது காளான் வித்து கிடைக்காமையாகும். இக்குறையைக் கிளிநொச்சி விவசாயபீட உயிரியல்துறைத் தலைவர் கலாநிதி பா. சிவகடாட்சம் தீர்த்து வைத்துள்ளார்.

கிளிநொச்சி விவசாயபீடத்தில் கடந்த 4-ம் திகதி திங்கட்கிழமை காலை யாழ். பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா காளான் வித்து விற்பனையை முதன்முதலாக ஆரம்பித்து வைத்தார். உபவேந்தர் தனது உரையில் காளான் வித்து உற்பத்தியை ஆரம்பித்துவைத்த கலாநிதி சிவகடாட்சத்தையும் அவரது சகாக்களையும் பாராட்டினார். காளான் வித்துக்களை உபவேந்தரிடமிருந்து விவசாயப் பிரதிப் பணிப்பாளர் கலாநிதி விவேகானந்தன் பெற்றுக் கொண்டார்.

அவரைத் தொடர்ந்து தமிழீழ ஆய்வு நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள், விவசாயபீட நலன்புரிச் சங்கத்தைச் சேர்ந்த பொதுமக்கள், மாணவர்கள் ஆகியோர் காளான் வித்துக்களை வாங்கிக் கொண்டனர்.

கலாநிதி பா. சிவகடாட்சம் தமக்கு வடபகுதியில் காளான் உற்பத்தி செய்யும் வாய்ப்பு பற்றியும் அதன் விபரங்கள் பற்றியும் முதன் முதலாக 1984-ம் ஆண்டளவில் அறியத்தந்த ஆய்வு நிறுவனத்தைச் சேர்ந்த திரு ரவிக்கும், தன்னுடன் இம்முயற்சியில் ஒத்துழைக்கும் திரு முகுந்தன், திரு தங்கராசலிங்கம், மற்றும் சக ஊழியர்க்கும் தனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

மேற்படி வைபவத்திற்குத் தலைமைவகித்துஉரையாற்றிய பேராசிரியர் சோ. கந்தையா காளான் உற்பத்தி ஒருமுறை சாரா விவசாயம் என்றும் சாதாரணமாக விவசாயத்துக்குத் தேவையான நிலம், நீர், உரம் போன்றவை இவ்வுணவு உற்பத்திக்குத் தேவையில்லை என்றும் வைக்கோல், கடதாசி, மரத்தூள் போன்ற கழிவுப் பொருட்களையே மூலதனமாகக் கொண்டு வீட்டிலேயே செய்யக்கூடிய சுயதொழில் என்றும் விபரித்தார். இறுதியில் கலாநிதி எஸ். மோகனதாஸ் நன்றியுரை வழங்கினார். காளான் வளர்ப்பு பற்றிய முதலாவது செய்முறை விளக்கமும் இறுதியில் இடம்பெற்றது. — கணேஸ்

## தேங்காய்களை பாதுகாக்கும் வழி

உதிர்ந்த தேங்காய்களிலும் மற்றும் முதிர்ந்த குரும்பைகளிலும் எலிகளால் ஏற்படுத்தப்பட்ட துளைகள் காணப்படும். எலிகள் இக்காய்களை துளைத்து உண்பதால் இவை உதிர்ந்து விடுகின்றன. இக்காய்களை தாக்கும் எலிகள் தென்னை மரங்களின் மீதே வசிக்கும். மட்டைகளின் இடையில் கூடுகள் அமைத்து குஞ்சுகளை வளர்க்கும். தோப்புகளில் தென்னை மரங்களில் மட்டைகள் ஒன்றோடொன்று இணைவதால் இவை சுலபமாக மரத்துக்கு மரம் சென்று தேவையான காய்களை கடித்து உண்கின்றன. இவ்வெலிகளைக் கட்டுப்படுத்த கீழ்க்கண்ட முறைகளைப் பின்பற்றலாம்.

மரங்களில் உள்ள தேவையற்ற பன்னாடை மற்றும் காய்ந்த பாகங்களை அகற்றி சுத்தப்படுத்த வேண்டும். இதைச்செய்யும்போது எலிகளின் கூடுகள் மற்றும் குஞ்சுகள் அழிக்கப்படுகின்றன. 'புரமோடயலோன்' வசிய நச்சுக்கட்டிகளை மரத்திற்கு 2 வீதம் மட்டைகளின் நடுவில் வைத்தால் எலிகள் கவரப்பட்டு தின்று மடியும். இக்கட்டிகளை மாதம் இருமுறை வைக்கலாம். எலித்தொல்லை முற்றிலும் நீங்கும்வரை வைக்கவேண்டும். ஒரு மரத்திற்கு ஒருமுறை 2 கட்டிகள் வைக்க ரூ. 1-50 சதம் செலவு ஆகும். இம்முறையில் தேங்காய்களை சேதப்படுத்துகின்ற அணில்களையும் கட்டுப்படுத்தலாம்.

தொகுப்பு:- க. கனகராசா

## குவைத் சொத்துக்களை ஒப்படைக்க
# ஈராக் புரட்சி சபை முடிவு

(பாக்தாத்)

குவைத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்ட சொத்துக்களை திருப்பி ஒப்படைக்க ஈராக் சம்மதம் தெரிவித்துள்ளது. ஈராக் தேசிய புரட்சிச் சபையால் இம்முடிவு எடுக்கப்பட்டது.

குவைத்திய சொத்துக்களை மீள ஒப்படைக்க வேண்டுமென்பது ஐ நா சபையின் தீர்மானமாகும். இதற்கிணங்கவே ஈராக் ஒப்புதல் அளித்துள்ளது. இதேவேளை ஈராக்குக்கு எதிராக விதிக்கப்பட்டிருந்த வர்த்தகத்தடையை விலக்கிக்கொள்வதாக ஐரோப்பிய பொருளாதார கமிசன் அறிவித்துள்ளது.

## மூளைக்காய்ச்சலினால் இருவர் மரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் கடந்த வாரத்தில் மட்டும் இருவர் மூளைக்காய்ச்சலினால் இறந்துள்ளனர்.

செல்வி கமலர் செல்லத்துரை (41 - வயது), திரு. மாணிக்கம் நவீந்தாஸ் (28-வயது) ஆகியோர் யாழ். போதனா வைத்தியசாலையில் மரணமடைந்துள்ளனர்.

## நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலக பிரதம கணக்காளராக திரு.எஸ். சிவபாலன் நியமிக்கப்பட்டுள்ளார்,

இவர் முன்பு ஓய்வூதியக் கணக்காளராகப் பதவி வகித்தார். திரு. பி. இராஜநாயகம் ஓய்வூதியக் கணக்காளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

## லோக்சபாவிலிருந்து
# இ. காங்கிரஸ் வெளிநடப்பு

(புதுடில்லி)

இந்திரா காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. ராஜீவ் காந்தி பின் இல்லம் ஹரியானா உளவுப் பிரிவினரால் கண்காணிக்கப்பட்டதை ஆட்சேபித்து இந்திரா காங்கிரஸ் கட்சியும் அதன் தோழமைக் கட்சிகளும் நேற்று முன்தினம் லோக்சபாவிலிருந்து வெளிநடப்புச் செய்தன.

கட்சியினரின் மேற்படி நடவடிக்கையில் சபையை 3 மணி நேரத்துக்கு முன்னதாக ஒத்திவைக்க வேண்டிய நிலை சபாநாயகருக்கு ஏற்பட்டது.

## இன்று

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் மகளிர் கல்லூரி வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி இன்று 7-ம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் நடைபெறும்.

பிரதமவிருந்தினராக கோட்டக் கல்வி அதிகாரி திரு. எஸ். தனஞ்சயனும், விசேட விருந்தினராக கல்வி அதிகாரி திரு. ரி. அருணகிரிராஜாவும், சிறப்பு விருந்தினராக கொத்தணி அதிபர் சி. கேசவராஜாவும் கலந்துகொள்வார்கள்.

## கொட்டடியில் உற்பத்திக்குழு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், கொட்டடியில் மகளிர் உற்பத்திக்குழு ஒன்று அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது உப-உணவுப் பொருள் உற்பத்தியில் சுயதொழில் வாய்ப்பை ஏற்படுத்தும் இக்குழுவில் 15யுவதிகள் ஆரம்ப உறுப்பினர்களாக கலந்துகொண்டனர்.

சிற்றூரவைப்பிரதிநிதி திரு. க. கமலேஸ்வரி, பனை அபிவிருத்திச்சபை உறுப்பினர் திரு. என் பாலசிங்கம் ஆகியோர் ஆரம்ப உரையாற்றினர். திருமதி சி நகுலேஸ்வரி தலைமையில் இக்குழு ஆரம்பிக்கப்பட்டது. இக்குழுவுக்கு யாழ். கொட்டடி வீரகத்தி விநாயகர் மகளிர் உற்பத்திக் குழு என்ற பெயரிடப்பட்டுள்ளது. (123)

## சிரமதானத்தின் மூலம்
# திருத்தப்பட்ட காணியில் மரவள்ளி உற்பத்தி

(கொழும்புத்துறை)

சுதுமலை தெற்கு காந்தி வீதி அம்பாள் சனசமூக நிலையத்தினர் பல வருடங்களாகப் பராமரிப்பின்றியிருந்த 5 பரப்புக் காணியைச் சிரமதானப் பணி மூலம் திருத்தியமைத்து விவசாய உற்பத்திகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இக்காணியில் நிலைய அங்கத்தவர்களின் முயற்சியால் 500 மரவள்ளிக் கட்டைகளை நாட்டி விவசாய உற்பத்திகளை மேற்கொண்டுவருவதாக நிலையச் செயலாளர் திரு க. நாகேந்திரன் தெரிவித்துள்ளார். (154)

## ஓய்வு பெற்றார்

(பருத்தித்துறை)

வலிகாமம் வடக்கு பிரதேச சபையிலிருந்து ஏழு ஊழியர் சுய இளைப்பாறுத்திட்டத்தின் கீழ் இளைப்பாறியுள்ளனர். (52)

## பலதும் பத்தும்

### பார்வையில்லை தரிசனமுண்டு!!

விசாகபட்டினத்தைச் சேர்ந்த கண்பார்வையற்ற இருபத்திரண்டு வயதுடைய பெண் செல்வி கொல்லூரு லக்ஸ்மி நாராயணம்மா இருபத்தாறு மணித்தியாலயங்கள் இடைவிடாது பகவத் கீதை சுலோகங்களை எழுதி கின்னஸ் சாதனை புரிந்துள்ளார்.

அவர் இதனை விழிப்புலனற்றோர் எழுதும் பாஷையான பிரெய்லி மொழியில் எழுதியுள்ளார். இவர் தமது சாதனையை விழிப்புலனற்றோருக்கான மொழியைக் கண்டுபிடித்த லூயி பிரெய்லியின் 152வது பிறந்த தினத்தையொட்டி நிகழ்த்தியுள்ளார். அவர் தற்போது பகவத்கீதை முழுவதையும் பிரெய்லி மொழியில்எழுதும் சாதனையில் ஈடுபட்டுள்ளார். அவருக்கு பார்வையில்லை. ஆண்டவன் தரிசனமுண்டு.

— ஞானி.

## உற்பத்திக்குழு நியமனம்

(பூநகரி)

90/91 காலபோக அறுவடை முடிவுற்றதும் தொடர்ந்து சிறுபோக விவசாயம். உப உணவுப் பயிர்கள் உற்பத்தியினை இலக்காக வைத்து உற்பத்தியைப் பெருக்கும் நோக்குடன் கிராமங்கள் தோறும் விவசாய உற்பத்திக் குழுக்களை அமைத்து மக்களை உற்பத்தி முயற்சியில் ஊக்குவிக்கும் பணியில் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் ஈடுபட்டுள்ளனர். (53)

## பருத்தித்துறை இலங்கை வங்கியில்
# 1637 குடும்பங்களுக்கு 4000 ரூபா வழங்கப்படும்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை இலங்கை வங்கியில் இம்மாதம் 9-ம், 16ம் திகதிகளில் (சனி) ஆறுகிராம சேவை அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த 1637 குடும்பங்களுக்கு சுயதொழில் பாதிப்பு நிவாரணம் 4000 ரூபா வழங்கப்படவுள்ளது.

9 ம் திகதி சனிக்கிழமை மந்திகை கிராமசேவை அலுவலர் பிரிவைச் சேர்ந்த 396 குடும்பங்களுக்கும், பருத்தித்துறை நகர கிராமசேவை அலுவலர் பிரிவைச்சேர்ந்த 379 குடும்பங்களுக்கும், பருத்தித்துறை கிழக்கு கிராமசேவை அலுவலர் பிரிவைச்சேர்ந்த 67 குடும்பங்களுக்கும் வழங்கப்படும்.

16-ம் திகதி சனிக்கிழமை பொலிகண்டி கிழக்கு கிராம சேவை அலுவலர் பிரிவைச் சேர்ந்த 393 குடும்பங்களுக்கும் பொலிகண்டி மேற்கைச் சேர்ந்த 189 குடும்பங்களுக்கும், புலோலி தெற்கைச் சேர்ந்த 213 குடும்பங்களுக்கும் இந் நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

இன்றைய சூழ்நிலைக்கேற்ப அவசியமேற்படுமாயின் இக்கொடுப்பனவுகளில் மாற்றங்கள் ஏற்படலாம் என்றும் வங்கி அறிவித்துள்ளது. (52)

## பாவனைப் பொருட்கள்

(பருத்தித்துறை)

உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினூடாக பாவனைப் பொருட்கள் வழங்கப்படவுள்ளது.

இப்பாவனைப் பொருட்கள் வந்ததும் உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் தனது பாவனையாளர்களுக்கு நிர்ணய விலையில் பொருட்களை விநியோகிக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [52]

## தமிழ்த்தினப் போட்டி:
# 4 போட்டிகளில் முதலாமிடம்

[பருத்தித்துறை]

வடமராட்சி கோட்டக் கல்வி அலுவலகப் பகுதிப் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற தமிழ்தினப் போட்டிகளில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரக் கல்லூரி நான்கு போட்டிகளில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது.

இசை (தனி) 3-ம் பிரிவில் செல்வி எஸ். ஜெயபாரதி முதலாமிடத்தையும், நடனம் (குழு) 4 ம் பிரிவில் 'உழவு நடனம்' முதலாமிடத்தையும், நடனம் (குழு) 3-ம் பிரிவில் 'மீனவ நடனம்' முதலாம் இடத்தையும், நடனம் (குழு) 4-ம் பிரிவில் 'சீதா சுயம்வரம்' நாட்டிய நாடகம் முதலாமிடத்தையும், இசை (குழு) 4-ம் பிரிவில் மூன்றுமிடத்தையும் பெற்றுக்கொண்டது. (52)

# ரஞ்சன் கொலை விசாரணை: பின்தொடர்ந்த 'ஹைஏஸ்' வான் திசை திரும்பி மோதியதா?

(கொழும்பு)

திரு. ரஞ்சன் விஜேரத்னவின் கொலைக்கு 5 நாட்களுக்கு முன் கோட்டை பொலிஸ் பகுதியில் காணாமற்போன 'ஹைஏஸ்' வான் வெடிகுண்டுடன் நிறுத்திவைக்கப்பட்ட வாகனமாக இருக்கலாமோ என கொழும்பு புலன் விசாரணைப் பகுதியினர் ஆராய்ந்து வருகின்றனர்.

திரு ரஞ்சன் விஜேரத்ன ஹவ்லொக் றோட் வழியே தினமும் சென்று வருவதை அவதானித்து இக்கொலைக்கான திட்டம் ஒரு மாதத்துக்கு முன்பே தீட்டப்பட்டிருக்கலாமெனவும் பொலிசார் தெரிவித்துள்ளனர். இதே வேளை அமைச்சரின் வெள்ளை நிற 'மெஸடெஸ் பென்ஸ்' காரைப் பின்தொடர்ந்து வந்த வாகனம் ஒன்று வேறோர் பாதையில் சென்று மீண்டும் அதே வீதிக்கு வந்து அமைச்சரின் காரை மோதித் தாக்குதலை நடத்தியதா என்ற சந்தேகமும் பொலிசாருக்கு ஏற்பட்டுள்ளது.

அன்று காலை அந்த வீதியில் நிறுத்தப்பட்டிருந்த வாகனங்களின் முழுவிபரமும் சேகரிக்கப்பட்டுவருகிறதாம். இச்சம்பவத்தை பார்த்து பலத்த காயத்துடன் உயிருடனிருக்கும் அதிரடிப்படை ஒருவரினதும், மருத்துவகல்லூரி மாணவி ஒருவரதும் வாக்கு மூலத்திற்காக பொலிசார் காத்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [சி-பூ]

## எண்ணெய்வள

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தாம். இந்த அகழ்வாராய்ச்சிப் பணிகள் நாட்டினுள்ளும் வெளியே இலங்கைக் கடற் பிராந்தியத்திலும் மேற்கொள்ளப்படும். [சி]

## ஜெனரல்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பாண்ட் வாத்தியம் சகிதம் கொண்டு செல்லப்பட்டது. அங்கு அஞ்சலியும், அஞ்சலி உரையும் நடைபெற்றபின் 21 பீரங்கி வேட்டுகள் முழங்க சந்தனமர சிதையிலிருந்த அமைச்சரின் பூதவுடலுக்கு அவரது மருமகன் திரு குமார் டி சில்வா தீமூட்டினார். (கி)

## ரஞ்சனின்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யைப் பொறுப்பேற்றுள்ளார்.

நாட்டில் இருந்து முற்றாகத் தீவிரவாதத்தை ஒழித்துக்கட்டப்போவதாகத் திரு விஜயதுங்கா பதவியைப் பொறுப்பேற்ற பின்னர் தெரிவித்துள்ளார். (சி)

## காரில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பரவலாக அடிபடுகிறது.

அமைச்சர் ரஞ்சனுடன் சென்று, குண்டு வெடிப்பில் இறந்தவர்களது பெயர் விபரம் இதுவரை வெளியிடப்படவில்லை.

இது தொடர்பான முழுமையான அறிக்கை எதுவும் வெளியிடப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (கி-153)

## தென்தமிழீழ

(1ம் பக்கத் தொடர்ச்சி)

னமும் வெறிச்சோடிக் காணப்படுகிறது. செங்கலடி முதல் மட்டக்களப்பு வரையிலான பத்து மைல் தூரமும் மனித சஞ்சாரமின்றி காணப்படுகின்றது.

தமிழ் மக்களது வயல்களில் குடியிருப்புக்கள் பலவும் காடு மண்டிக் காணப்படுகிறது. (150)

# திருமலையில் மிதிவெடி 2 இராணுவம் காலிழப்பு

## மன்னாரில் விமான தாக்குதல்

(திருமலை)

திருமலை மாவட்டத்தில் உள்ள ஈச்சலம்பத்தை இராணுவ முகாமிலிருந்து இராணுவத்தினர் பூநகரில் ரோந்து வந்தபோது விடுதலைப்புலிகளின் மிதிவெடிகளில் சிக்கியதில் இரு இராணுவத்தினர் கால்களை இழந்த நிலையில் முகாமிற்குப் பின்வாங்கினர்.

நேற்றுமுன்தினம் காலை 7-30 மணிக்கு மேற்படி சம்பவம் நடைபெற்றது.

இதேவேளை மன்னார் பகுதியில் நேற்றுக் காலை 9-00 மணி தொடக்கம் இரு பொம்மர் விமானங்கள் நான்கு தடவைகள் குண்டுகளை வீசியதாகக் கூறப்படுகிறது. (வி)

## கொழும்பில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் ரஞ்சனின் கொலையை யடுத்தே இவர்கள் கைது செய்யப்பட்டு காணமல் போயுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதுவரை சுமார் 2,000 பேர் வரை கைதுசெய்யப்பட்டதாகவும், இவர்களில் பலரிடமிருந்து பெருமளவு பணம் பெறப்பட்ட பின்னர் அவர்கள் விடுவிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது. (56)

## புளொட்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கத் தெரியவருகிறது.

இம்மோதலின் விளைவாகத் தமிழர்கள் பலர், படையினராலும், 'புளொட்' இயக்கத்தினராலும் கடுமையாகத் தாக்கப்பட்டனர் என்றும் தெரியவந்துள்ளது. [56]

## ஒரு தாய்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

புலோலி மேற்கைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை பரமேஸ்வரி (வயது 47) என்ற பெண் சைக்கிளில் தமது மகனுடன் வல்லையூடாக சென்று கொண்டிருந்த வேளையில் இச்சம்பவம் நடைபெற்றது. [150-52]

## தவறான

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முக்கியமாக உளரீதியாகப் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது."

இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கிய பிரமுகரான திரு. மஹிந்தா விஜேசேகரா கூறியுள்ளார். (பூ)

## இராணுவம்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

யுள்ளதாக 'ராய்ட்டர்' செய்தி தெரிவித்துள்ளது.

இப்படுகொலைச் சம்பவம், இராணுவத்தின் மனநிலையை மிகவும் மோசமாகப் பாதித்து விட்டதாக இராணுவ அதிகாரிகளுடன், எதிர்க் கட்சி முக்கியஸ்தர் ஒருவரும் கூறியுள்ளார்.

இவ்வாறான நுட்பமானதும், மிகத் திறமைசாலித்தனமுமான தாக்குதலை புலிகளைவிட, வேறு எந்தவொரு அமைப்பினாலும் செய்யமுடியாது என மேற்றுலக ராஜதந்திரி ஒருவர் 'ராய்ட்டர்'ருக்குத் தெரிவித்துள்ளார். (கி)

## மீண்டும்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஆதரவில்லாமல் ஆட்சியைக் கொண்டு செல்லமுடியாதென்றும் தெரிவித்தார்.

வேவு பார்த்த பிரச்சனை பெரிதுபடுத்தக் கூடியதொன்றல்ல ராஜீவின் வற்புறுத்தல் பலவற்றிற்கு தாம் சில சமயம் அடிபணிய வேண்டிய நிலை ஏற்பட்டதாகவும், ராஜீவ் காந்தி புதிய அரசை அமைக்க தமது கட்சி ஒருபோதும் ஆதரவு வழங்கமாட்டாதென்றும் திரு. சந்திரசேகர் தெரிவித்தார்.

பிரதமர், தமது பதவி விலகல் கடிதத்தை ஜனாதிபதியிடம் கையளித்தார். அதனை அவரும் ஏற்றுக்கொண்டுள்ளார். இதன்போது புதிதாகத் தேர்தலை நடத்துமாறு தாம் பரிந்துரைத்ததாகவும், அடுத்த 24 மணி நேரத்திற்குள் தமது முடிவை அறிவிப்பதாகவும், புதிய அரசு அமைக்கப்படும் வரை தம்மைப் பதவியில் இருக்குமாறு ஜனாதிபதி கேட்டுக்கொண்டதாகவும் திரு. சந்திரசேகர் தெரிவித்தார். (கி)

# கடற்படை தாக்குதல் மீனவர் பலி

(வடமராட்சி)

வல்வெட்டித்துறை ஆதிகோவிலடி கடற் பகுதியில் நேற்று அதிகாலை சிறிலங்கா கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் ஒருவர் பலியானார். இருவர் படுகாயமடைந்தனர். நால்வரைக் காணவில்லை.

நேற்று அதிகாலை, இக்கடற் பிரதேசத்தில் கடற்றொழிலில் ஈடுபட்டிருந்தோர் மீது கடற்படையினர் சரமாரியாகச் சுட்டபோதே இச்சம்பவம் இடம்பெற்றது.

இத்தாக்குதலில் எஸ் நிர்மலன் (வயது 19) மயிலிதனை, வல்வை என்பவர் பலியானார். இ. மூத்துலிங்கம் (வயது 47) ஆதிகோவிலடி வல்வை, எஸ். பிரான்ஸிஸ் கொன்சன்றைன் கடுமையான தாக்குதலுக்கு இலக்காகி மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுடன் சென்ற பொ. நாகேஸ்வரன் [வயது 21] ஆதிகோவிலடி, வல்வை, சிவப்பிரகாசம் இளங்கோ (வயது 22] உட்பட நால்வர் காணமல் போயுள்ளனர். படகும் முற்றாக சேதமுற்றது. (51 – 52)

## காங்கிரஸ்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

துள்ளன.

உடனடியாக பாராளுமன்றத்தைக் கலைத்து புதிய தேர்தலை நடத்துமாறும் எதிர்க்கட்சிகள் ஜனாதிபதியை தனித்தனியாக சந்தித்தபோது வற்புறுத்தியுள்ளன.

இதேவேளை தம்மை ஆட்சி அமைக்க அழைக்குமாறு இந்திரா காங்கிரஸ் கோரலாமென்றும் செய்தி ஒன்று தெரிவித்துள்ளது. புதிய தேர்தலுக்கு திரு ராஜீவ் காந்தி எதிர்ப்புத் தெரிவித்துள்ளார். ஜனாதிபதியை நேற்று மாலை இவர்கள் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

## ஜனாதிபதி ஆலோசனை

இதற்கிடையில் அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பாக ஜனாதிபதி திரு. வெங்கட்ராமன் சட்டவல்லுநர்களுடன் ஆராய்ந்து வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

பிரதமர் சந்திரசேகருக்கு தமது கட்சி தொடர்ந்து ஆதரவு வழங்கி வந்த போதிலும் அவரது முடிவு தமக்கு பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளதாக திரு. ராஜீவ் காந்தி தெரிவித்துள்ளார். (சி)

## மகளிர் தின விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டச் சிக்கனக் கடனுதவுக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச மகளிர் குழுவினரால் நடாத்தப்படும் சர்வதேச மகளிர் தினவிழா நாளை வெள்ளிக்கிழமை காலை 9-00 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். (வி)

## சதாமின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எனினும் சதாமின் மகன் கொல்லப்பட்டாரா அல்லது உயிரோடு இருக்கிறாரா என்ற செய்தி இதுவரை ஊர்ஜிதப் படுத்தப்படவில்லை. [பூ)

## வளலாய்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இரு பொம்மர்களும், ஒரு ஹெலியும் இத்தாக்குதலை மேற்கொண்டன. இதில் பல வீடுகள் பலத்த சேதமடைந்துள்ளன.

இத்தாக்குதலில் பொதுமக்கள் தரப்பில் ஏற்பட்ட உயிர்ச்சேதம் குறித்து விபரம் எதுவும் கிடைக்கவில்லை. (51)


## மரண அறிவித்தல்

### க. வேலாயுதபிள்ளை

(ஓய்வுபெற்ற சிறைச்சாலை களஞ்சியப் பொறுப்பாளர்)

உரும்பராய் வடக்கைச் சேர்ந்த ஓய்வுபெற்ற சிறைச்சாலை களஞ்சிய பொறுப்பாளர் க. வேலாயுதபிள்ளை நேற்று சிவபதமடைந்துவிட்டார். இவர் பசுபதி அம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற ஜெயராஜா (கனடா], திருமதி ஜெயராணி குணரத்தினம் (யாழ். சிறைச்சாலை], மகேந்திரன் (U. K.), பத்மராணி நித்தியானந்தன் (கனடா), சந்திரயோகினி, சரவணமுத்து (கனடா), தயாபரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், ரேனுகா, குணரத்தினம், நித்தியானந்தன், சரவணமுத்து உதயா ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜயந்தன் (கனடா), அபிராமி, குகஜெயன், ஜயகரன், பிரதீசன், உரும்பராய் ரமணன், ராகவன், ரமணி, கிருஷ்ணா, கணேஸ், அகிலா, அர்ச்சனா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரது ஈமக்கிரியைகள் இன்று [7-03-91) வியாழக்கிழமை பி.ப. 2 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக எருவன் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும், இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

தகவல்;

ஜெயராணி குணரத்தினம்,

(4430)



## அறிவித்தல்

### நாயன்மார்கட்டு முறிவு நெரிவு வைத்தியசாலை

மேற்படி வைத்தியசாலை 1915-ம் ஆண்டு 5189 இலக்க நொத்துவ நியமன உறுதியின்படியும் அதில் உள்ள பரம்பரையினரால் அங்கு பரம்பரை வைத்தியம் நடைபெற்று வருகிறது. அத்துடன் அங்கு முறிவு நெரிவு நோயாளிகள் கிரமமாகவும் வந்து சிகிச்சை பெற்றுச் செல்கிறார்கள். வைத்தியசாலையையும் நோயாளர்களையும் அலைக்கழிக்கவும், தோற்கடிக்கவும் எமது குடும்பத்தைச் சாராத சிலர் முனைவதாக தெரிகிறது. இது சம்பந்தமாக சகல பொது மக்களும் வைத்தியசாலையின் மீதும் அதன் பரம்பரை மீதும் இனங்கண்டு சிகிச்சை பெறுமாறு வேண்டப்படுகிறார்கள்.

பொதுமக்களின் நலன்கருதி எனது இலவச சேவை வெள்ளியும், செவ்வாயும் கைதடி ஆயுர்வேத வைத்தியசாலையில் நடைபெற்று வருகிறது.

இங்ஙனம்

உண்மையுள்ள

ஏ. உமாகாந்தன்

உரிமையாளர்.

(சி- 4431)



இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 53-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு மார்ச் மாதம் 7-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81.